MCOP.No. 506/2023
Date : 16.10.2025
Pw – 1
பெயர்: ராஜு
த/பெ: முத்தையா

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து தேதியில் Hero Honda Activa இரு சக்கர வாகனத்தை நான் தான் ஓட்டி சென்றேன். சம்பவம் நடைபெற்ற இடம் புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகில் என்று சொன்னால் சரிதான். மேற்படி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள அம்மா மருந்தகம் முன்பாக எனது இரு சக்கர வாகனத்தில் இருந்து எனது பேரனை இறக்கிவிட்டுவிட்டு கிழக்கு நோக்கி செல்வதற்காக அந்த ரோட்டை குறுக்காக கடந்து ரோட்டின் இடது பக்கம் சென்று விட்டேன். எதிர்மனுதாரரின் அரசு பேருந்து எனக்கு பின்னால் வந்து தான்மோதியது. மேற்படி பேருந்து, பேருந்து நிலையத்தில் இருந்து வெளியே வந்து அது கிழக்கு திசையை நோக்கி செல்வதற்காக வந்தது என்று சொன்னால் சரிதான். விபத்து சரியாக நடைபெற்ற இடமானது, புதிய பேருந்து நிலையத்தின் பேருந்துகள் உள்ளே செல்வதற்கான இடத்திற்கு நேராக வடக்கு பக்கமாகும். அரசு பேருந்தின் வலது முன்பகுதி என்னுடைய இரு சக்கர வாகனத்தின் பின்புறத்தில் மோதியது. நான் சொல்வதுபோல் மேற்படி விபத்து நடைபெறவில்லை என்று சொன்னாலும், நான் கவனக்குறைவாக ரோட்டை குறுக்காக கடக்கும்போது தான் நான் அரசு பேருந்தில் மோதிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது பேரனை இறக்கிவிட்டுவிட்டு பேருந்துகள் பேருந்து நிலையத்தில் இருந்து வெளியே செல்லும் பகுதி வழியாக கிழ மேற்கு ரோட்டை கடந்திருந்தால் மேற்படி விபத்து நடைபெற வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. இரு சக்கர வாகனம் எனது மகன் பெயரில் உள்ளது. விபத்து சமயத்தில் இரு சக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு எனக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருந்தது. இந்த வழக்கில் நான் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனத்தின் உரிமையாளரையும், அதன் காப்புறுதி நிறுவனத்தையும் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். அதேபோல் இரு சக்கர வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர்அறிக்கையையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆய்வறிக்கையை தாக்கல் செய்தால் விபத்திற்கு காரணம் நான்தான் என்பது தெரிந்துவிடும் என்பதற்காகவே அதை தாக்கல் செய்யாமல் மறைத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்தில் எனக்கு தலை, இடதுதோள்பட்டை,

வலதுபக்க இடுப்பு, ஆகிய இடங்களில் காயங்களும், வலது கணுக்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு பிளேட் பொருத்தப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் நான் தலை கவசம் அணிந்திருந்தேன். அதுபோல் தலைகவசம் அணியவில்லை என்று சொன்னாலும் அவ்வாறு அணிந்திருந்தால் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்று சொன்னாலும் சரியல்ல. விபத்து நடந்தவுடன் புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். அங்கு 9 நாட்கள் சிகிச்சை பெற்றேன். அதன்பிறகு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். தனியார் மருத்துவமனையில் நான் சிகிச்சை எடுத்துக்கொண்டதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தற்போதும் நான் ஓய்வூதியம் பெற்று வருகிறேன். எனக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் சாதாரண காயங்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகமானது என்று சொன்னாலும் அடிப்படை ஆதரவு அற்றது என்று சொன்னாலும் சரியல்ல. இரு சக்கர வாகனத்திற்கு ஏற்பட்ட சேதத்திற்கு எதிர்மனுதாரர் பொறுப்பல்ல என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவு தான் காரணம் என்பதால் எதிர்மனுதாரரிடம் இருந்து எனக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

Sd/– ராஜு

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.